# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.கண்ணன் | அ.சா.16 | LW.23 |
| Father's Name | : தங்கராஜ் | | |
| Village | : பட்டனம் கிராமம் | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : 26 | | |
| Time | : 12.57 pm – 1.02 pm | | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 14th day December 2021.
14.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். யாரோ இறந்து கிடப்பதாக தகவல் கேள்விப்பட்டு பட்டனம் ஏரிக்கு சென்று போய் பார்த்தேன். தேதி நினைவில்லை. 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு பெண்ணின் பிணம் கிடப்பதாக பேசிக்கொண்டார்கள். எல்லோரும் கும்பலாக இருந்தார்கள். நானும் போய் பார்த்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்பெயரை கேட்டார், நான் சொன்னேன், அவ்வளவு தான்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

பட்டனம் ஏரிக்கு எல்லோரும் கும்பலாக போனார்கள், நானும் போனேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலீசார் என் பெயரை மட்டும் கேட்டார்கள், வேறு எதுவும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.43-2019

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name :திரு.நடராஜன் அ.சா.17 LW.25

Father's Name : வேலாயுதம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 59

Time : 1.03 pm – 1.09 pm

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 14th day December 2021.
14.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பி.ஆர்.எஸ் துணிக்கடையில் வாச்சுமேன் மற்றும் சூப்பர்வைஸ்சராக பணிபுரிந்து வருகிறேன் அந்த துணிக்கடை திண்டிவனத்தில் உள்ளது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் மறுநாள் வந்து விசாரணை செய்யும்போது ஆஜர் எதிரிகளை காண்பித்தார்கள். சிசிடிவி கேமராவை பார்த்தபோது நான் ஆஜர் எதிரிகளை காண்பித்தேன். துணி வாங்கிக்கிட்டு போய் பில்போடும் இடத்தில் வைத்தேன். துணியை எடுத்துக்கொண்டு போய் அந்த டேபிளில் வைப்பதோடு சரி. நான் வாச்சுமேனாக இருக்கிறேன், ஆள் இல்லாத நேரத்தில் பில்லை எடுத்துக்கெண்டு போய் கேஷியரிடம் வைப்பேன். சிசிடிவி கேமராவை மறுநாள் வந்து பார்த்தார்கள். சிசிடிவி கேமராவை போட்டு காண்பிப்பவர் வந்தார். துணியை எடுத்துகிட்டு போய் பில் போடும் இடத்தில் வைத்தது நான். கொண்டு போய்

வச்சிட்டு வந்தாயே ஆள் யாராவது தெரியுமா என்று கேட்டார்கள். சிசிடிவி கேமராவை செக்பண்ணினார்கள். பார்த்துவிட்டு என்னிடம் அட்ரஸ் சொல்லுப்பா என்று கேட்டுவிட்டு போனார்கள். எங்கள் பில்லை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும்.

மதிய உணவு இடைவேளைக்காக வழக்கு நிறுத்திவைக்கப்பட்டது.
<u>முதல் விசாரணை தொடர்ச்சி ( பிற்பகல் 3.12 - 3.47 )</u>

என்னென்ன அயிட்டம் எடுத்து வைத்தேன் என்பதை பில்லை பார்த்தால் என்னால் சொல்ல முடியும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

பி.ஆர்.எஸ் துணிக்கடையில் நான் 13 வருடமாக வேலை பார்த்து வருகிறேன். அந்த துணிக்கடை தரைதளத்தோடு சேர்த்து 4 மாடி உடையது. அந்த கடையில் 180 பேர்வேலை செய்கிறார்கள். வழக்கமாக துணிக்கடையை இரவு 9 மணிக்கு மூடிவிடுவோம் என்றால் சரிதான். சீசனாக இருந்தால் 10, 11 மணி ஆகும், எல்லா ஜனங்களும் வெளியில் வந்தவுடன் குளோஸ் பண்ணிடுவோம். 4 எதிரிகளும் வந்து துணிவாங்கி போன மறுநாள் காலையில் வந்து போலீசார் விசாரணை செய்து சிசிடிவி பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் அந்த துணிக்கடையில் வாச்சுமேனாக வேலை செய்கிறேன் என்றால் சரிதான் வாச்சுமேன் மற்றும் சூப்பர்வைஸ்சராக வேலை செய்கிறேன். அங்கு வேலை செய்பவர்கள் போனவுடன், கூடமாடசேர்ந்துவேலை செய்வோம். எங்கள் கடை பில் ஜிஎஸ்டி உள்ள கம்பியூட்டர் பில் தான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்பட்ட பில் எங்கள் கடை பில் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் ஆஜர் எதிரிகள் நால்வரும் எங்கள் கடையில் வந்து துணி எடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. நான் சொன்னதுபோல் போலீசார் வந்து எங்கள் கடையில் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் துணிவாங்கி சென்ற மறுநாள் காலை 10 மணியளவில் வந்து போலீசார் விசாரணை செய்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் கடையில் வந்து பார்த்தார்கள். பார்த்ததற்கு அத்தாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.